‘திராவிட மாடல்’ ஆட்சியில் கோலாகலமாக நடைபெற்ற

திருச்செந்தூர் முருகன் திருக்கோயில் குடமுழுக்கு விழா!

சட்டம் – ஒழுங்கைப் பறைசாற்றும் முத்திரை விழா!

சென்னை, ஜூலை 9-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் கோலாகலமாக நடைபெற்ற திருச்செந்தூர் முருகன் திருக்கோயில் குடமுழுக்கு விழா, எங்கும் எந்தவொரு பிரச்சினையும் இல்லாத வெற்றி விழா, திராவிட மாடல் அரசின் சட்டம் ஒழுங்கைப் பறைசாற்றும் ஒரு முத்திரை விழாவாக நடைபெற்றது.

தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் முருகப் பெருமானுக்குத் தமிழ்நாட்டில் ஆறுபடை வீடுகள் உள்ளன. அவற்றுள் இரண்டாம் படை வீடு திருச்செந்தூர் திருக்கோயில்.

தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன், திருச்செந்தூர் திருக்கோயிலில் குடமுழுக்கு விழா 7.7.2025 திங்கள்கிழமை காலை 6.50 மணியளவில் கோலாகலமாக நடைபெற்றது. இந்த குடமுழுக்கு விழா தமிழ்நாடு அரசின் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மீன் வளத்துறை அமைச்சர் அனிதா இராதா கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் தமிழ் மறைகள் முழங்கிட தருமபுர ஆதினம், மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சாமிகள், சிருங்கேரி சாரதா பீடாதிபதி சாமிகள் முதலானோர் சூழ வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருச்செந்தூரின் கடலோரத்தில் கூடிய கூட்டம் தலையா, கடல் அலையா என ஒரு திரைப்படத்தில் வரும் பாடல் வரிகள் தமிழ்நாட்டின் மூலை முடுக்கில் எல்லாம் பல ஆண்டுகளாக முழங்கி வருவதை எவரும் மறந்திட முடியாது.

திருச்செந்தூர் முருகன்கோயில் கும்பாபிஷேகத்தில் லட்சக்கணக்கில் திரண்ட மக்கள்!

அந்த அளவுக்கு திருச்செந்தூர் கோயிலைச் சூழ்ந்த நாற்புறங்களிலும், கடலோரத்தில் மணலே தெரியாத அளவுக்கு இலட்சக் கணக்கான மக்கள் கூடியிருந்த காட்சிகளை அங்கிருந்தவர்கள் மட்டுமல்ல, தொலைக்காட்சி வழியாக குடமுழுக்கு விழாவைப் பார்த்து மகிழ்ந்த மக்கள் அனைவரும் கண்டு மகிழ்ச்சியில் திளைத்தனர்.

திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு விழாவை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின்படி, அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால், அறநிலையத்துறை அதிகாரிகளின் துணையோடு திருச்செந்தூரிலேயே முகாமிட்டு நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதிலுமிருந்து வருகைபுரிந்த இறையன்பர்கள் எல்லோரும் குடமுழுக்கு விழாவைக் கண்டு மனநிறைவோடு - மகிழ்ச்சியோடு ஊர் திரும்பியுள்ளனர்.

திருச்செந்தூர் குடமுழுக்கு விழாவிற்காக திராவிட மாடல் அரசின் அருமையான முன்னேற்பாடுகளை குறிப்பாக அனைத்து மாநிலங்களிலிருந்தும் சிறப்புப் பேருந்து வசதிகள், தங்குமிட வசதிகள், திரும்பிய இடமெல்லாம் அன்னதானங்கள் என அனைத்தையும் கண்டு மகிழ்ந்த பொது மக்கள் மலைத்துப்போய் தமிழ்நாடு அரசையும், முதலமைச்சர் அவர்களையும் பாராட்டினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்செந்தூர் குடமுழுக்கு விழாவிற்கு வருகைதந்த பொதுமக்களின் பாதுகாப்பிற்காக அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோரிடம் தேவையான வசதிகளைச் செய்துதர அறிவுரைகள் வழங்கினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள், மாநில அளவிலான சிறப்புப் பொதுக் கூட்டங்கள் என எது நடத்தினாலும், வருகை புரிந்த தொண்டர்கள் அனைவரின் நலனிலும் தனிக்கவனம் செலுத்துவார்கள். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நிகழ்ச்சிக்காக வருகை புரிந்தவர்களை நோக்கி, நீங்கள் அத்துணை பேரும் பத்திரமாக உங்கள் ஊருக்கும், வீடுகளுக்கும் திரும்பிச் சென்றுவிட்டீர்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்த பிறகு தான் நான் நிம்மதி அடைவேன் என்று கூறுவார்கள்.

அதுபோலவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு விழாவைக் காண வந்த மக்கள் அனைவரும் பத்திரமாகத் திரும்பி ஊர் சென்று அவரவர் வீடுகளைச் சென்றடைவதற்குத் தேவையான வசதிகளைச் செய்திட உத்தரவு பிறப்பித்தார்கள்.

அந்த உத்தரவை தலைமேற்கொண்டு அமைச்சர் பெருமக்களும், மாவட்ட நிர்வாகமும், காவல்துறை அதிகாரிகளும் இரவு பகல் பாராமல் முறையாகத் திட்டமிட்டு, குடமுழுக்கு விழாவை மிக மிகச் சிறப்பாக நடத்தி முடித்துள்ளார்கள். எந்த இடத்திலும் மக்கள் சிரமப்பட வில்லை.

திருச்செந்தூர் குடமுழுக்கு விழாவிற்கு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகைபுரிந்த ஏறத்தாழ 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் குடமுழுக்கு விழாவில் பங்கேற்று பக்திப் பரவசத்துடன் தங்கள்தங்கள் ஊர்களுக்கும் வீடுகளுக்கும் சென்று சேர்ந்துள்ளார்கள்.

இலட்சக் கணக்கான மக்கள் கூடிய திருச்செந்தூர் திருமுருகன் திருக்கோயில் குடமுழுக்கு விழாவுடன், வடபுலத்தில் நடைபெற்ற கும்பமேளாவை ஒப்பிட்டால், அப்பப்பா, எத்தனை எத்தனை பேர் அங்கு மடிந்தனர். எவ்வளவு பெரிய தீ விபத்துகள் அங்கே நிகழ்ந்தன. எவ்வளவு குடும்பங்கள் அங்கே பாதிக்கப்பட்டன. கும்பமேளாவிற்கு வருகைதந்த மக்கள் டெல்லி உட்பட பல இரயில் நிலையங்களில் எவ்வளவு பிரச்சினைகளைச் சந்தித்தனர். எத்தனை கொடுமைகள் நிகழ்ந்தன.

அவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, எத்தனை இலட்சம் பேர் வந்தால் என்ன, அவர்கள்அத்துனை பேரின் நலன்களையும் பாதுகாப்பையும் உறுதி செய்து, நன்கு திட்டமிட்டு, திருச்செந்தூர் திருமுருகன் திருக்கோயில் குடமுழுக்கு விழாவை மக்கள் பாராட்டும் வகையில் நடத்தி வெற்றி கண்டுள்ள திராவிட மாடல் அரசின் நாயகரும், அவரது அமைச்சர்கள், அதிகாரிகள் முதலானோரும் என்றும் எல்லோருக்கும் முன்னோடிகள் அல்லவா!

வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில்! திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

பொன்னேரி - கும்மிடிப்பூண்டி BLA 2 பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

ஆ.இராசா எம்.பி., அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரையற்றினர்!

திருவள்ளூர், ஜூலை 09;- திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி தொகுதிகுட்பட்ட பி.எல்.ஏ 2 பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் பொன்னேரியில் நடைபெற்றது.

இதில் கழக துணை பொது செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி, சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் பல்வேறு ஆலோசனை வழங்கினார்கள் அப்போது ஆ.இராசா எம்பி பேசுகையில்

2026இல் வரவுள்ள சட்டமன்ற தேர்தல் என்பது இந்தியாவின் அரசியல் சட்டத்தை பாதுகாக்க கூடிய தேர்தல் எனவும், இந்தியாவையும், தமிழ்நாட்டையும், அரசியல் சட்டத்தையும் பாதுகாக்க கூடிய தேர்தல் என்றார். அரசியல் என வந்து விட்டால் தமிழ்நாட்டில் அரசியலையும், ஆன்மீகத்தையும் கலக்க மாட்டோம் என்றும், தாய் மொழி தொடர்பாக மகாராஷ்டிராவில் தற்போது விழிப்புணர்வு வந்துள்ளது எனவும், நம் நாட்டில் உணவு, உடை, கலாச்சாரம் அனைத்தும் வேறு வேறு, ஆனால் ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே தேர்தல் என பாஜக முயற்சி செய்து வருகிறது எனவும்

அரசியல் சட்டத்தை எடுக்க தான் பாஜக முயற்சி செய்து வருகிறது என தெரிவித்தார். நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக 5500 மருத்துவ சீட் ஒன்றிய அரசு கபளீகரம் செய்தது, அதில் 15% இட ஒதுக்கீட்டு மறுக்கப்பட்டது என்றும் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டு 15% இட ஒதுக்கீட்டை பெற்று தந்தவர் முதலமைச்சர் ஸ்டாலின் என்றார்.

எந்த கட்சியும் இதுவரை தேர்தல் பணியும், கூட்டணி தொடங்கவில்லை, நாம் ஏன் விரைவாக தொடங்க வேண்டும் என கேட்ட போது, அமலாக்கத்துறை போன்ற அனைத்து துறைகளும் நமக்கு எதிரி என முதலமைச்சர் தெரிவித்ததாக கூறினார்.

யூனிட் ஒன்றிற்கு 1பைசா குறைக்க வேண்டும் என கோரிக்கை வைத்த விவசாயிகள் மீது துப்பாக்கி சூடு நடத்தியவர் எம்ஜிஆர் எனவும், விவசாயிகளின் பெருந் துயரை கணக்கில் கொண்டு விவசாயிகள் யூனிட் ஒன்றிற்கு 1பைசா கூட கொடுக்க வேண்டாம் என்று இலவச மின்சாரம் கொடுத்தவர் தலைவர் கலைஞர் எனவும் பேசினார் நிகழ்ச்சியில் ஊத்துக்கோட்டை பேரூராட்சி பகுதியில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட அதிமுகவினர் அமைச்சர் சா.மு.நாசர் முன்னிலையில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் வரவேற்பில் திமுகவில் இணைந்தனர் அவர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றார்கள்

இந்நிகழ்ச்சியில் கும்மிடிப்பூண்டி சட்ட மன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் செல்வராஜ், அழகிரி சதாசிவம், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மு.பகலவன், பி.ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், பி.வெங்கடாஜலபதி, டாக்டர் பரிமளம், கே. ஜி.பாஸ்கர் சுந்தரம், வே.அன்புவாணன், ஏ.கே. சுரேஷ்,

ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்த் குமார், ந.பரிமளம், மு.மணிபாலன், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேலு, ஜான்பொன்னுசாமி, மு.முரளிதரன், கா.சு.ஜெகதீசன், ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே. ஆனந்தகுமார், ஜி.ரவிக்குமார், அபிராமி குமரவேல், இரா.அறிவழகன், பி.முத்து, க.சு. தமிழ் உதயன்

பேரூராட்சி மன்ற தலைவர்கள் ருக்மணி மோகன் ராஜ், அப்துல் ரஷீத், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.வி.லோகேஷ், வெற்றி(எ) ராஜேஷ், முகமது அலவி, பா.சம்பத், பா. தனசேகர், ஜி.பி.வெங்கடேசன், ஏ.கே.சம்பத்குமார், பொன்னையன், வி.பி. ரவிக்குமார், ஜெயலிதா சசிதரன், ஜி.சுமன், ஜி.ரமேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் பொன்னேரி மற்றும் கும்மிடிப் பூண்டி தொகுதிக் குட்பட்ட பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

முடிவில் மீஞ்சூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆ.ராஜா நன்றி கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இராயபுரம் கே.இ. சம்பந்தம்

ஜூலை 9 (1993)

நீதிக்கட்சிக் காலம் தொட்டு திராவிட இயக்க பற்றாளராக விளங்கியவர்.

வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும், இராயபுரம் பகுதி அவைத் தலைவராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகத்திற்கு சொந்தமாக ஒரு அலுவலக கட்டிடம் வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பியபோது, இராயபுரத்தில் ஒரு கட்டிடத்தை முன்னின்று விலைபேசி கழகத்திற்கு வாங்கிட துணைபுரிந்தவர். அக்கட்டிடம் பின்னர் ‘அறிவகம்’ என்று அண்ணாவால் பெயர் சூட்டப்பட்டு தலைமைக் கழகமாக இயங்கியது

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று ஏழு முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சென்னை வடகிழக்கு மாவட்டம்,மாதவரம் வடக்கு பகுதி,23 அ வட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பில் திமுக அரசின் 4 ஆண்டு சாதனைகளை எடுத்துக் கூறி தீவிர உறுப்பினர் சேர்க்கையில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் வட்டச் செயலாளர் வி.ஆர். குப்பன், நிர்வாகிகள் பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் பி.டி.ஏ. ஆகியோர் ஈடுபட்டு, முதலமைச்சர் படம் பொறித்த உறுப்பினர் அட்டையை பொதுமக்களிடம் வழங்கி, ஓரணியில் தமிழ்நாடு என்று வாசகம் பொரித்த ஸ்டிக்கரை வீடுகள் தோறும் ஒட்டினர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் மெட்ராஸ் என்பதை சென்னை என மாற்றிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்கி மற்றும் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற தலைப்பில் தமிழக முதல்வர் அவர்களின் முன்னெடுப்பை விளக்கும் வகையில் மாவட்ட கழகம் சார்பில் வாகன பிரச்சாரம் 132 அ வட்டத்திற்கு உட்பட்ட கோடம்பாக்கம் ஸ்டேஷன் ரோடு, மற்றும் ரங்கராஜபுரம் 5 விளக்கு அருகில் 132 அ வட்டகழக செயலாளர் கேஎஸ்.வெல்டிங்ராஜா தலைமையில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை.எம்.சி. திருமதி பா.கார்த்திகா பாஸ்கர்.எம்.சி. ஆகியோர் முன்னிலையில், சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் என். எஸ்.. பாலசுப்பிரமணியம் தலைமை கழக பேச்சாளர் சண்முகநாதன் ஆகியோர் தமிழக அரசின் சாதனைகளை விளக்கி உரையாற்றினர். உடன் வட்டகழக, பகுதிகழக, மாவட்ட கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.